

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நெமிலி வட்டம் நெல்வாய் கிராமத்தைச் சேர்ந்த தமிழரசன் என்கிற இளைஞர் கடந்த ஜனவரி 22ந் தேதி உயிரிழந்ததை அடுத்து ஏழ்மை நிலையில் உள்ள அவரது குடும்பத்திற்கு வீடு கட்ட 3சென்ட் நிலத்திற்கான பட்டா ஆணையினை அந்த இளைஞனின் தாயார் ஜானகியிடம் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கடலூர் மேற்கு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம். கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி ஏற்பாட்டில் நெய்வேலி தொ.மு.ச அலுவலகம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார். மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் முன்னிலை வகித்தார்.கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார். இதில் துரைராஜ்.ராஜேஷ்,நாராயணசாமி, சதாம்,பாரதிராஜா உள்ளிட்ட நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கெடுக்கவே – ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை!

# ‘திராவிட மாடல்’ கொள்கை கொண்ட தமிழ்நாட்டின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது!

## சென்னை மேற்கு மாவட்ட கண்டனப் பொதுக்கூட்டத்தில் – அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!

**சென்னை. பிப். 11 -**

**சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சென்னை சூளைமேட்டில் நடைபெற்ற தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆற்றிய உரை வருமாறு :**

ஒன்றிய அரசானது தமிழ்நாடு அரசை தொடர்ந்து புறக்கணித்தும் வஞ்சித்தும் வருகிறது. "ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஓரவஞ்சனைதான் "தமிழ்நாடு" என்ற பெயர்கூட தொடர்ந்து இடம்பெறுவதில்லை.

நிதி பங்கீட்டில் ஓரவஞ்சனை ஒன்றிய அரசின் நிதித் தொகுப்புக்கு தமிழ்நாட்டில் இருந்து அதிக வரி வருவாய் கிடைக்கும் நிலையிலும் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியின் அளவு தொடர்ந்து குறைவாகவே இருந்து வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்புவரை இந்த நிதிப்பகிர்வில் 7 முதல் 8 சதவிகிதம் வரை தமிழ்நாட்டிற்குக் கிடைத்தன தற்போது இது 4 சதவிகிதமாக குறைந்து விட்டது. ஆனால் வேறு சில மாநிலங்களுக்கு 10 முதல் 15 சதவிகிதம் அளவுக்கு நிதி அதிகமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு, ஒன்றிய அரசுக்கு வரியாக ஒரு ரூபாய் அளித்தால், 29 பைசா தான் திரும்பக் கிடைக்கும். ஆனால், உத்திரபிரதேசத்திற்கு 2 ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது.

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழுங் குடி" என்ற திருக்குறளை மேற்கோள் காட்டியிருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல் குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர் என்பது அதற்கு பொருள். நாடாளுமன்றத்திற்கு பிரதமர் செங்கோலை வைத்துவிட்டால் மட்டும் போதாது செங்கோல் தவறாமல் பாரபட்சம் இல்லாமல் ஆட்சி நடைபெற வேண்டும், நிதிப்பகிர்வு இருக்க வேண்டும். இந்த நிலையில் பட்ஜெட்டிலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

**தமிழ்நாடு அரசின் திட்டங்களை நிபந்தனைகள் விதித்து முடக்க முயற்சி**

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களுக்கு ஒன்றிய அரசானது, மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிரான நிபந்தனைகளை விதிப்பதுடன், அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகளை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல், அத்திட்டங்கள் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கிறது. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ் ஒன்றிய அரசிடம் இருந்து வர வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதி நிலுவையில் உள்ளது. ஆசிரியர்களின் ஊதியம், பள்ளிகள் பராமரிப்பு ஆகியவற்றுக்கு இது முக்கியமான நிதி ஆகும். இதுவரையில் மானிய உதவித் தொகையை விடுவிக்கவில்லை.

தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு கட்டாயப்படுத்தி மாநிலங்களில் திணிப்பதால், இத்திட்டங்களும் தற்போது முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசு வீடுதோறும் குடிநீர் (*Jal Jeevan Mission*) என்ற இத்திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய 4,142 கோடி ரூபாயில், 732 கோடி ரூபாயை மட்டுமே வழங்கியுள்ளது. நிதியின்மையினால் திட்டங்களின் செயல்பாடு பாதிக்கக் கூடாது என்பதால் தமிழ்நாடு முதல்வர் போதிய நிதியை கொடுத்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒன்றிய அரசின் மானியத்தொகை. 1.5 இலட்சம், ஆனால் தமிழ்நாடு அரசானது, வீடு ஒன்றிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாயை தன் சொந்த நிதியின் மூலம் மானியமாகக் கொடுத்து ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களின் சொந்த வீட்டிற்கான கனவினை நிறைவேற்றி வருகிறது. ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் மானியத் தொகையானது ரூ. 0.72 இலட்சம் மட்டும் கடந்த எட்டு வருடங்களாக மாறாமல் இருந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு அரசு வீடு ஒன்றிற்கு 1.72 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கி வருகிறது.

மேலும் நமது அரசின் கீழ் செயல்படுத்திவரும் "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ், மாநில அரசின் மானியமானது 3.53 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இது, ஒன்றிய அரசு தன்னுடைய திட்டத்திற்கு வழங்கும் மானியத்துடன் ஒப்பிடுகையில் ஐந்து மடங்கு அதிகம். நூறுநாள் வேலைத்திட்டத்தில் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட அதே 86 ஆயிரம் கோடி தான் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் கூட உயர்த்தவில்லை. இந்த நிதி ஒன்பது மாதம் கூட போதாது. இன்னும் சிறிதுகாலம் சென்றால் 30 நாள் வேலைத் திட்டம் என பெயர் மாற்றுவது



ஒன்றுதான் பாக்கி.

**அதானி அம்பானி கார்பரேட்டுகளுக்கு வரி விலக்கு!**

இந்த ஓரவஞ்சனைகளுக்கு காரணம் காங்கிரஸ் கொண்டு வந்தது என்பதாலும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் உள்ளதால் இத்திட்டத்தை பாஜக அரசு ஒழிக்க பார்க்கிறது. கோட்சே பெயரில் திட்டம் பாஜக கொண்டு வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு எந்த வரி உயர்வும் செய்யவில்லை. ஆனால் ஏழைகளின் உணவு மானியம் ரூ.5,41,330.14 கோடியிலிருந்து ரூ.2,03,420 கோடியாக குறைக்கப்பட்டு ள்ளது. இது 62% மானியங்கள் வெட்டு ஏழைகளுக்கு வேட்டு. ஒன்றிய அரசு தன்னுடைய திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியினை தமிழ்நாடு அரசின் மீது திணிப்பதால். மாநில அரசின் முன்னுரிமைத் திட்டங்களுக்குப் போதிய நிதியளிப்பு இல்லாமல் போகிறது.

**தமிழ்நாட்டின் இயற்கைப் பேரிடருக்கு கூட உதவுவது இல்லை!**

ஃபெஞ்சல் புயல் பேரழிவுகள் மீட்புப் பணிகளுக்கு 6,675 கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடுகள் செய்யப்பட்டு, நிதி விடுவிப்புக் கோரிக்கை ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால். இதுவரை எந்தவொரு நிதியையும் ஒன்றிய அரசானது விடுவிக்கவில்லை. கடந்த நிதியாண்டில், மிக்ஜாம் புயல் தாக்கியது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் அதிகனமழைப் பொழிவு ஏற்பட்டது. இந்த இரண்டு பேரிடர்கள் ஏற்பட்ட பின்னரே மிகச் சொற்பமான 276 கோடி ரூபாயை அதுவும் நான்கு மாத தாமதத்திற்குப் பின்னரே ஒன்றிய அரசு அனுமதித்தது. இது, மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒருசதவீதம் கூட இல்லை. தமிழ்நாட்டுக்கு வெள்ள நிவாரணநிதியை வழங்காத ஒன்றிய அரசுக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி நீதிமன்றம் சென்றோம்.

எந்த நிதியும் வழங்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருவது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று கூறி அந்த வழக்கை தமிழ்நாடு அரசு தொடர்ந்தது. இடைக்கால நிவாரணமாக 2,000 கோடி ரூபாயை வழங்க உத்தரவிட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசின் மனுவில் கோரப்பட்டிருந்தது. இதன்பிறகுதான் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதியை அறிவித்தது. நிதி நெருக்கடியில் இருந்த போது தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதியில் இருந்து நிவாரண உதவிகளையும் பணிகளையும் மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாகவும், உட்கட்டமைப்புகளை மறுசீரமைக்கவும் தமிழ்நாடு அரசு மாநிலப் பேரிடர் நிதியில் இருந்து இது வரை 2,477 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

**ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்குப் பின்னரும் சீரிய ஆட்சியால் தமிழ்நாடு வளர்ச்சி!**

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பாராட்டு:

வேதியியலுக்கான நோபல் பரிசு (2009) வென்ற வெங்கி இராமகிருஷ்ணன் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில், இந்திய அளவில் மிகவும் முன்னேறிய மாநிலம் தமிழ்நாடுதான். எந்த அளவீடுகளை எடுத்துக்கொண்டாலும் தென்மாநிலங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. தமிழ்நாடு, குறிப்பாக பெண் உரிமை, பெண் சுகாதாரம், குழந்தைகள் நலன், கல்வி உள்ளிட்ட பல விஷயங்களில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டால் நிச்சயம் தமிழ்நாடு தனித்து தெரியும். தென்இந்தியாவை மட்டும் தனியாக எடுத்துக்கொண்டு முன்னேற அனுமதித்தால், தெற்கு ஆசிரிய நாடுகளுக்கு இணையாக தென்இந்தியா வளரும் என பேட்டி அளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் கடந்த 31.01.2025 அன்று 202425ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் தமிழ்நாடு அரசின் பல்வேறு சாதனைகளுக்கு பாராட்டுதல்கள் சொல்லப்பட்டுள்ளது. அந்தளவுக்கு தமிழ்நாடு பல்வேறு வழிகளில் வளர்ந்து வருகிறது. தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக இருக்கிறது. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்துள்ளது. பொருளாதாரக் குறியீடுகள் அனைத்திலும் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது. மருத்துவம், கல்வி, சமூக நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக இருக்கிறது.

**மாணவர் சேர்க்கையில் தமிழகம் முன்னிலை!**

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்", மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளது. கட்டணமில்லாத மகளிர் விடியல் பயணமானது மகளிரின் சேமிப்பை அதிகரித்துள்ளது. சமூகத்தில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்துள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பள்ளிக் குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரித்துள்ளது. அவர்களது கவனிக்கும் திறனை மேம்படுத்தி உள்ளது. புதுமைப் பெண் திட்டத்தால் மாணவியரின் உயர் கல்விச் சேர்க்கை அதிகரித்துள்ளது. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி வழங்குவதால் இந்தியாவின் திறன்மிக்க இளைஞர்களின் தலைநகரமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது.

மருத்துவ சிகிச்சையில் தமிழ்நாடு முன்னிலை!

இதில் பயிற்சி பெற்ற 2.58 லட்சம் மாணவர்கள் வேலை வாய்ப்பை உடனே பெற்றுள்ளார்கள். இந்தியாவில் வலிமை மிக்க விளையாட்டு மையமாக தமிழ்நாடு வளர்ந்துவிட்டது. ஆண்டுதோறும் 15 லட்சம் பேர் உயர் சிகிச்சை பெற தமிழ்நாடு வரும் அளவுக்கு மருத்துவத் தலைநகராக தமிழ்நாடு திகழ்கிறது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருதைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பன்முக வறுமைக் குறியீடுகளின் கீழ் 2.2 விழுக்காடு மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 14.96 விழுக்காட்டை விட மிகமிகக் குறைவு ஆகும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டத்தை அரசு தொடங்க உள்ளது.

**பெண்கள் பாதுகாப்பில் தமிழ்நாடு முன்னிலை!**

அமைதியான மாநிலமாக இருப்பதால் பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில் 41 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளில் 10 லட்சம் கோடிக்கும் மேலான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**பா.ஜ.க வினை தமிழ்நாடு மக்கள் விரட்டுவார்கள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது சிந்தனைத் திறத்தால் உருவான "திராவிட மாடல்" கொள்கை கொண்ட தமிழ்நாட்டின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கெடுக்கவே நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை ஆளுநரின் அத்துமீறல்கள் இத்தனையும் தாண்டி சூரியனின் வெளிச்சம் ஓரவஞ்சனை செய்யும் ஒன்றிய அரசின் தாமரையை பொசுக்கும். தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என்று துரோகம் புரியும் பா.ஜ.க வை தமிழக மக்கள் விரட்டியடிப்பார்கள்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோ.வி.செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர், கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் நா.எழிலன் அவர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே. மோகன், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஆயிரம் விளக்கு வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகி கள், சேப்பாக்கம்- திருவல்லிக் கேணி வட்டக் கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், K.பந்தாரப்பள்ளி ஊராட்சி டோல்கேட் செல்லும் சாலை முதல் குதுகுமேடு வரை நாபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 40.88 இலட்சத்தில் புதிய தார்ச்சாலை அமைத்தல் பணியினை திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்துகொண்டு பணியினை தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி முனிசாமி, பொதுக்குழு உறுப்பினர் கே.சாம்மண்ணன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்காரவேலன், மாவட்ட பிரதிநிதி கணேசன், ஒன்றிய கவுன்சிலர் காந்தி, ஊராட்சி மன்ற தலைவர் ஜெயாசரவணன், கிளை செயலாளர்கள் அழகேசன், செல்வம், வார்டு உறுப்பினர்கள் கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, சஞ்சிவன், தண்டபாணி, சேகர், நந்தில்குமார், வினோத் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### லயோலா கல்லூரி வணிக நிர்வாக பயிலகம் சார்பில்

# செயற்கை நுண்ணறிவின் பரிணாமம் - சொற்பொழிவு!

## கே.அசோக்வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) சிறப்புரை!

சென்னை, பிப். 11-

லயோலா வணிக நிர்வாக பயிலகம் (LIBA) சார்பில் ‘செயற்கை நுண்ணறி வின் பரிணாமம்’ தொடர்பான சொற்பொழிவு நாளை நடை பெறுகிறது. ஓய்வு பெற்ற முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும், இந்தியக் கடல்சார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தருமான கே.அசோக் வர்தன் ஷெட்டி சிறப்புரை ஆற்றுகிறார் .

லயோலா கல்லூரியில் உள்ள லயோலா வணிக நிர்வாகப் பயிலகச் சார்பில் நாளை (12.2.2025) காலை 9.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் கிரைசாலிஸ் (Chrysalis) துவக்க விழா டாக்டர் சேவியர் பிரிட்டோ ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

அதில் செயற்கை நுண்ணறிவு பரிணாமம் தொடர்பாக சொற்பொழிவு நடைபெறுகிறது. அதில் கே.அசோக் வர்தன் ஷெட்டி (ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி) பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிபவர்களை ‘லிபா’ இயக்குநர் மறைதிரு டாக்டர் சி.ஜோ அருண் வரவேற்கிறார்.

### டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., முன்னிலை!

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்!

கடலூர், பிப்.11-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், 08.02.2025, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணியளவில், நெய்வேலி தொ.மு.ச கலைஞர் அரங்கத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வருகின்ற பிப்ரவரி 21,22 ஆம் தேதி கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு திட்ட பணிகளை ஆய்வு செய்யவும், முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைக்கவும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கவும், மாநில பெற்றோர் ஆசிரியர், கழக மாநாட்டு நிறைவு விழாவிற்கும் மற்றும் கழகத்தினருடன் கலந்துரையாடல் செய்து வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் நமது கழகமும் கூட்டணி கட்சி வேட்பாளர்களும் வெற்றி பெறுகின்ற வகையிலும், கழக வளர்ச்சி பணியினை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கிடவருகை தரும் திராவிட மாடல் நாயகன், கழக தலைவர், முதல்வர் தளபதி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திட இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று தளபதி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

வருகின்ற மார்ச் 1ம் தேதி 72வது பிறந்த நாள் காணும் தமிழகத்தில் நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வரும், இந்தியாவின் நம்பர் ஒன் முதல்வர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாளை, கடலூர மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சிகள், மற்றும் கிளை கழகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடுகின்ற வகையில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்திட சிறப்பு வாய்ந்த இந்நிகழ்ச்சியில் அனைத்து சார்பு அணிகளும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகின்ற 2026 இல் நடைபெறும் உள்ள சட்டமன்ற தேர்தலில் நமது கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சூலுரையான "வெல்வோம் 200 படைப்போம் வரலாறு" என்ற கூற்றினை மெய்ப்பிக்கின்ற வகையில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள வாக்குச்சாவடிக்கும், ஏற்கனவே முடிவு செய்தபடி வாக்குச்சாவடி முகவர்களை நியமிக்க ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்வதோடு, அதன் விபரம் அடங்கிய பட்டியலை மாவட்ட கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வி.கே.வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், கே.அறிவழகன், பொ.புகழேந்தி ஆர். பாலகிருஷ்ணன், ஆர்.ராதாகிருஷ்ணன், க.ராஜேந்திரன், செந்தமிழ்செல்வி கருப்புசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டூர் வி.அமிர்தலிங்கம், பா.செங்குட்டவன், த.சின்னசாமி, சிவ.தியாகராஜன், கனக.கோவிந்தசாமி, தி. வேல்முருகன், ஆசைத்தம்பி பா. சுரேஷ், ஆ.குணசேகரன், இரா.சந்தோஷ்குமார்,

நகரச் செயலாளர்கள் கே.ராஜேந்திரன், பா.மணிவண்ணன், க.தண்டபாணி, வி.குருநாதன், பரமகுரு, பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.சுந்தரவடிவேல் வ.ஜெயமூர்த்தி, சி.செல்வம், எம்.எஸ்.கணேஷ்குமார், க.ராமு, சதீஷ்குமார், அருள்குமார், பாரி இப்ராஹிம், வழக்கறிஞர் மதனகுரு, ஜி.ஆனந்த்,ஜெயந்தி நடராஜன், சேதுராமன், அன்சரலி, முகமது யூசுப், செந்தில்குமார், தங்க.அன்பழகன், சாமிநாதன், இந்துமதி, ஆர். ராஜேஷ், பூ.அரங்கநாதன், டி.குணா, க.சேகர், கோனூர் பூ.மதியழகன், ராஜேஷ், தங்க.நாராயணசாமி, துரைராஜ் ,சதாம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெய்வேலி சட்டமன்ற தொகுதி மேலிருப்பு ஊராட்சி தே.மு.தி.க.வைச் சேர்ந்த அன்பழகன் பா.ம.க.வை சேர்ந்த சேகர் ராஜாராம் அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருநாவுக்கரசு பிச்சமணி மற்றும் கருக்கை ஊராட்சி அ.தி.மு.க.வைச் சார்ந்த சண்முகம்,முரளி, நாகப்பன் சொக்கநாதன் இவர்கள் தலைமையில் ஆண்கள் பெண்கள் 400க்கும் மேற்பட்டோர் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டனர் அவர்களை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், நெய்வேலி நகர செயலாளர் குருநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், மாவட்ட பிரதிநிதி GR. ஆடலரசன், ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் ராஜேஷ், மேலிருப்பு வழக்கறிஞர் ஹரிதாஸ், தினகரன், சத்யராஜ், தகவல் தொழில் அணி ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன், பைரவன்,ரவி, கோபு,ஞானசேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.